# மேற்கு வங்கத்தில் ஆட்சி அமைப்பதற்கு முன்பே பா.ஜ.க.வினர் வன்முறை!

## தொடரும் வன்முறையால் பெரும் பதற்றம்!

கொல்கத்தா, மே.8-

மேற்குவங்கம் மாநிலத்தில் ஆட்சி அமைப்பதற்கு முன்பே பா.ஜ.க.,வினர் வன்முறையை அரங்கேற்றி வருவதால் பொதுமக்கள் அச்சம் அடைந்துள்ளனர். மேலும், 3 நாட்களில் 3 திரிணாமுல் காங்கிரஸ் நிர்வாகிகள் படுகொலை செய்யப்பட்டுள்ளதால் பெரும் பரபரப்பு நிலவுகிறது.

மேற்குவங்கம் மாநிலத்தில் நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில், தேர்தல் ஆணையத்தின் உதவியுடன் பா.ஜ.க., வெற்றி பெற்றது. இந்நிலையில், ஆட்சி அமைப்பதற்கு முன்பே மாநிலத்தில் அக்கட்சியினர் பயங்கர வன்முறையை கட்டவிழ்த்து விட்டுள்ளனர். வன்முறை தொடரும் நிலையில் இதுவரை 433 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். வன்முறை தொடர்பாக 200க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் வெற்றி கொண்டாட்டம் என்ற பெயரில் மேற்குவங்கம் முழுவதும் பா.ஜ.வி.,னர் வன்முறை வெறியாட்டத்தால் பொதுமக்கள் மிகுந்த அச்சமடைந்துள்ளனர். கொல்கத்தாவில் உள்ள இறைச்சி கடைகளை பா.ஜ.க. வினர் புல்டோசர் மூலம் இடித்ததால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. திரிணாமுல் காங்கிரஸ் அலுவலகம் மீது பா.ஜ.க.,வினர் தாக்குதல் நடத்தியது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. வன்முறை சம்பவங்கள் அரங்கேறிய போது, மத்திய பாதுகாப்பு படையினர் அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததாக புகார் எழுந்துள்ளது. மேற்குவங்கம் மாநிலத்தில் ரத்தக் கறையோடு அரங்கேறும் அதிகார மாற்றம் பொதுமக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இடதுசாரிகள் மற்றும் ஜனநாயக சக்திகள் மீதான பாசிச பாஜகவின் திட்டமிட்ட தாக்குதலுக்கு கண்டனம் எழுந்துள்ளது.

முர்ஷிதாபாத்தில் லெனின் சிலையை உடைத்த பா.ஜ.க.,வினர்

சுவேந்து அதிகாரியின் உதவியாளர் மர்ம நபர்களால் சுட்டுக்கொலை இதனிடையே முர்ஷிதாபாத் மாவட்டத்தில் அமைந்துள்ள லெனின் சிலையை பா.ஜ.க.,வினர் உடைத்ததால் பரபரப்பு ஏற்பட்டது. பா.ஜ.க.,வினரின் இந்த வன்முறை செயலுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பா.ஜ.க. முதலமைச்சர் வேட்பாளர் சுவேந்து அதிகாரியின் உதவியாளர் நேற்று முன்தினம் இரவு மர்ம நபர்களால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளது பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.

## வாட்ஸ் அப்பில் வலம் வருகிறது!




### பேரிடர் மேலாண்மையில் ஒரு புதிய சகாப்தம்!

# சுனாமி அலைகளின் ரகசியம் கண்டுபிடிப்பு!

## விண்வெளியில் இருந்து படம் பிடித்து நாசா சாதனை!

வாஷிங்டன், மே 8-

கடல் என்றாலே மர்மம்தான். ஆனால், அந்த மர்மத்தை உடைத்து, சுனாமி அலைகளின் ரகசியத்தை விண்வெளியில் இருந்து துல்லியமாக படம் பிடித்து சாதனை படைத்திருக்கிறது நாசாவின் SWOT செயற்கைக் கோள். ரஷ்யாவின் கம்சட்கா அருகே ஏற்பட்ட நிலநடுக்கமும், தொடர்ந்து உருவான சுனாமியும் அறிவியலாளர்களுக்கு புதிய பாடத்தைக் கற்றுக்கொடுத்துள்ளது.

**சுனாமி அலை**

பொதுவாகச் சுனாமி வரும்போது, அதன் வேகத்தையும் உயரத்தையும் அளவிடுவது கடினமான காரியம். இதற்கு முன் இருந்த செயற்கைக் கோள்கள் மூலம் கடலின் ஒருசிறு பகுதியை மட்டுமே பார்க்க முடிந்தது. ஆனால், SWOT (Surface Water and Ocean Topography) செயற்கைக்கோள், அகலமான கோணத்தில் ஒட்டுமொத்த கடல் பரப்பையும் ஸ்கேன் செய்து, சுனாமி அலைகள் நகர்வதை ஒரு சினிமா போலப் படம்பிடித்துள்ளது. கடந்த ஜூலை 29இல், குரில்கம்சட்கா பகுதியில் ஏற்பட்ட 8.8 ரிக்டர் நிலநடுக்கத்தின் போதுதான் இந்த அபூர்வக் காட்சிகள் பதிவாகின.

இத்தனை காலமும் சுனாமி அலைகள் என்பது ஒரு பெரும் சுவர் போலச் சிதறாமல் நேராகப் பயணிக்கும் என்றுதான் நம்பப்பட்டது. ஆனால், இந்த புதிய தரவுகள் அந்த நம்பிக்கையைத் தகர்த்துள்ளன. சுனாமி அலைகள் ஒரே சீராகப் பயணிக்காமல், கடலில் நகரும்போது பல குட்டி குட்டி அலைகளாகப் பிரிந்து ஆற்றலைச் சிதறடிக்கின்றன (Wave Dispersion). இதன் மூலம், சுனாமி கரையைத் தொடும்போது நாம் எதிர்பார்த்ததை விட அதன் தாக்கம் மற்றும் நேரம் மாறக்கூடும் என்பது தெரியவந்துள்ளது.

ஆரம்பத்தில் இந்த நிலநடுக்கம் 300 கி.மீ நீளத்திற்குப் பிளவை ஏற்படுத்தியதாகக் கணிக்கப்பட்டது. ஆனால், செயற்கைக் கோள், கடலுக்கடியில் உள்ள DART மிதவை உணர்விகள் கொடுத்த தகவல்களை வைத்துப் பார்த்தபோது, அந்த நிலநடுக்க பிளவு 400 கி.மீ தூரம் வரை நீண்டுள்ளது கண்டுபிடிக்கப் பட்டது. இது நிலநடுக்கத்தின் தீவிரத்தை நாம் இன்னும் ஆழமாகப் புரிந்துகொள்ள உதவுகிறது. 1952இல் இதே பகுதியில் ஏற்பட்ட பேரிடருக்குப் பிறகுதான் நவீனச் சுனாமி எச்சரிக்கை அமைப்புகள் உருவாயின. இப்போது கிடைத்துள்ள இந்தத் தொழில்நுட்ப முன்னேற்றம், எச்சரிக்கை முறைகளில் புரட்சியை ஏற்படுத்தப் போகிறது. சுனாமி எந்த நேரத்தில் கரையைத் தொடும்? எவ்வளவு உயரத்தில் அலைகள் வரும்? போன்றவற்றை இனி மிகத் துல்லியமாகக் கணிக்க முடியும். இந்தச் செயற்கைக்கோள் தரவுகளை நேரடி கண்காணிப்பில் பயன்படுத்துவதன் மூலம், கடலோர மக்களுக்குச் சரியான நேரத்தில் எச்சரிக்கை வழங்கி ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்ற முடியும்.

நமக்கு எல்லாம் தெரியும் என்று நினைத்த விஷயத்தை, புதிய தொழில்நுட்பம் பொய்யாக்கிப் புது உண்மைகளை வெளிக்கொண்டு வந்துள்ளது. விண்வெளியில் இருந்து கடலை உற்று நோக்கும் இந்த முயற்சி, பேரிடர் மேலாண்மையில் ஒரு புதிய சகாப்தத்தைத் தொடங்கியுள்ளது. இயற்கையின் சீற்றத்தை நம்மால் தடுக்க முடியாவிட்டாலும், நவீன அறிவியலின் துணையோடு அதன் பாதிப்பிலிருந்து நம்மைத் தற்காத்துக் கொள்ள முடியும் என்பதற்கு இந்த ஆய்வு ஒரு சிறந்த சான்று.

# பிளஸ் 2 தேர்வு முடிவுகள் வெளியிடுவதில் தாமதம்!

சென்னை,மே.8-

தமிழகத்தில் மாநிலப் பாடத்திட்டத்தின் கீழ் இயங்கும் பள்ளிகளில் 2025-26ம் கல்வி ஆண்டுக்கான பிளஸ் 2 வகுப்பு பொதுத் தேர்வு மார்ச் 2ம் தேதி தொடங்கி 26ம் தேதி வரை நடந்தது. இந்த தேர்வில் பள்ளி மாணவ மாணவியர் 7 லட்சத்து 99 ஆயிரத்து 692 பேரும், தனித் தேர்வர்களாக 27 ஆயிரத்து 783 பேரும் என மொத்தம் 8 லட்சத்து 27 ஆயிரத்து 475 பேர் எழுதினர்.

அதன் தொடர்ச்சியாக, பிளஸ்2 வகுப்பு தேர்வுகளுக்காக தமிழகம், புதுச்சேரியில் 3412 தேர்வு மையங்களும், அமைக்கப்பட்டன. இதையடுத்து, மார்ச் மாதம் இறுதியில் விடைத்தாள் திருத்தும் பணிகள் தொடங்கியது.

மே மாதம் 8ம் தேதி தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் என்று தேர்வுத்துறை ஏற்கெனவே அறிவித்து இருந்தது. முன்னதாக ஏப்ரல் மாதம் விடைத்தாள் திருத்தும் பணி முடிக்கப்பட்டு, தேர்வு முடிவுகளை வெளியிடுவதற்கான அனைத்து பணி நடந்தது.

இந்நிலையில், ஏற்கெனவே அறிவித்தபடி மே 8ம் தேதி தேர்வு முடிவுகள் வெளியிடவும் தயார் நிலையில் வைக்கப்பட்டது.

ஆனால் முடிவுகளை அறிவிக்க, அரசு அனுமதி பெற்றபிறகே வெளியாகும் என்ற தகவல் வெளியானது. இதனால் தேர்வு முடிவுகள் வெளியாவதில் தாமதம் ஏற்படும் என்ற சூழ்நிலை நிலவியது.

இது குறித்து அரசு தரவில் வெளியான தகவலின்படி, தற்போது தேர்வு முடிவுகள் வெளியிடுவதற்கான பணிகள் நடக்கிறது. அது தொடர்பான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றும் தெரிவித்துள்ளது.

### சிவகங்கை மாவட்ட — கழக மூத்த முன்னோடி

# சாக்கோட்டை முன்னாள் ஒன்றியச் செயலாளர் சுப.முத்துராமலிங்கம் மறைவு!

சிவகங்கை. மே 8.

சிவகங்கை மாவட்டம் சாக்கோட்டை ஒன்றியம் முன்னாள் கழக செயலாளர் சுப. முத்துராமலிங்கம் நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். இவர் சாக்கோட்டை முன்னாள் ஒன்றிய பெருந்தலைவராக பதவி வகித்தார்.



சாக்கோட்டை ஒன்றிய கழகச் செயலாளராக நீண்டநாள் பணியாற்றினார். கழக மூத்த முன்னோடியான முத்துராம லிங்கம் நேற்று திடீரென்று இயற்கை யெய்தினார்.

## கழகத்தினர் அஞ்சலி!

அவரது உடலுக்கு கழக நிர்வாகிகள் மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

அன்னாரது இறுதி ஊர்வலம் அவரது சொந்த ஊரான இலுப்பைக்குடியில் இன்று நடைபெறுகிறது.

### பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக

# பாகிஸ்தானில் அமெரிக்கத் தூதரகம் மூடல்!

வாஷிங்டன், மே. 8-

வடமேற்கு துன்கவா மாகாணத் தலைநகர் பெஷாவரில் உள்ள தனது துணைத்தூதரகத்தைப் பாதுகாப்புக் காரணங்களுக்காகப் படிப்படியாக மூடப்போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

தூதரக அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், சரியான வளமேலாண்மைக்கும் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் விடுத்துள்ள அறிக்கையில், 'அமெரிக்க ஊழியர்களின் பாதுகாப்பே எங்களுக்கு மிக முக்கியம்.

பெஷாவர் துணைத் தூதரகம் மூடப்பட்டாலும், கைபர் பக்துன்கவா மாகாண மக்களுடனான பொருளாதார, பாதுகாப்பு ரீதியான உறவுகள் தொடர்ந்து நீடிக்கும். கைபர் பக்துன்கவா

மாகாணத்துக்கான ராஜீய உறவுகள் இனி இஸ்லாமாபாதில் உள்ள அமெரிக்க தூதரகம் மூலம் மேற்கொள்ளப்படும். பாகிஸ்தானுடனான அமெரிக்காவின் கொள்கை முன்னுரிமைகளில் எவ்வித மாற்றமும் இல்லை. இஸ்லாமாபாத், கராச்சி, லாகூர் ஆகிய இடங்களில் உள்ள மற்ற தூதரகங்கள் வழியாக அமெரிக்கா - பாகிஸ்தான் இடையிலான இரு தரப்பு உறவுகள் தொடர்ந்து வலுப்படுத்தப்படும்' என்று கூறப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில்

இருந்து ஊடுருவும் பயங்கரவாதிகள், இந்த எல்லை மாகாணத்தில் அவ்வப்போது தாக்குதல்களை நடத்தி வருகின்றன. இதற்குப் பதிலடியாக பாகிஸ்தான் நடத்திய தாக்குதல்கள் இருநாட்டு மோதலாக வெடித்தது. எனினும், தொடரும் பயங்கரவாதத் தாக்குதல்களால் பாதுகாப்பு அச்சுறுத்தலைக் கருதி தூதரகத்தை மூடுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

### ஈரோடு மத்திய மாவட்டம், பவானி வடக்கு ஒன்றியச் செயலாளர்

# கே.ஏ.சந்திரசேகர் தாயார் திருமதி பெத்தாயம்மாள் மறைவு!

## சு.முத்துசாமி — என்.நல்லசிவம் — தோப்பு என்.டி.வெங்கடாசலம் நேரில் அஞ்சலி!

ஈரோடு, மே.8-

ஈரோடு மத்திய மாவட்டம், பவானி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் கே.ஏ.சந்திரசேகர் தாயார் திருமதி பெத்தாயம்மாள் அவர்கள், (வயது 86), (7.5.2026 -வியாழக் கிழமை) காலை வயது மூப்பின் காரணமாக அவரது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்கிற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.



மறைவு செய்தி அறிந்த முன்னாள் அமைச்சரும் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளருமான சு.முத்துசாமி, ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், ஈரோடு மத்திய மாவட்ட கழக செயலாளர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் ஆகியோர் நேரில் சென்று அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். மேலும் மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், ஊராட்சி, வார்டு கிளை கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், அனைத்து கட்சி நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நேற்று (7.5.2026 வியாழக் கிழமை) மாலை பவானி குருப்பநாயக்கன் பாளையம் இடுகாட்டில் எரியூட்டப்பட்டது.

# சொகுசுக் கப்பலில் ஹன்டா வைரஸ் தொற்றால் 3 பேர் உயிரிழப்பு!

புதுடெல்லி, மே.8–

மேற்கு ஆப்பிரிக்கக் கடற்கரையில் சுமார் 150 பயணிகளுடன் நிறுத்தப்பட்டுள்ள சொகுசுக் கப்பல் ஒன்றில் 'ஹன்டா வைரஸ்' தொற்று ஏற்பட்டுள்ளது. இதன் பாதிப்பால் 3 பயணிகள் உயிரிழந்தனர்.

மேலும் பலர் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த வைரஸ் மனிதர்களிடையே பரவக்கூடிய தன்மையைக் கொண்டிருக்கலாம் என்ற தகவல் சர்வதேச அளவில் அச்சத்தை அதிகரித்துள்ளது. இந்த ஹன்டா வைரஸ் எலிகள் மற்றும் பெருச்சாளிகள் மூலம் மனிதர்களுக்குப் பரவுகிறது.

அவற்றின் எச்சில், சிறுநீர் அல்லது கழிவுகளுடன் நேரடித் தொடர்பு ஏற்படும்போது பாதிப்பு உண்டாகிறது. ஆனால், இந்த வைரஸால் எலிகளுக்குப் பாதிப்பு ஏற்படுவதில்லை. எலிக் கழிவுகள் படிந்த இடங்களைச் சுத்தம் செய்யும்போது, அந்த நுண்துகள்கள் காற்றில் கலந்து, அவற்றை சுவாசிப்பதன் மூலம் பெரும்பாலானோர் பாதிக்கப்படுகின்றனர்.

பொதுவாக ஹன்டா வைரஸ் மனிதர்களிடையே பரவுவது மிக அரிது. இருப்பினும், தென் அமெரிக் காவில் காணப்படும் 'ஆண்டீஸ்' வகை வைரஸ் மட்டும் நெருங்கிய தொடர்புகள் மூலம் மனிதர்களிடையே பரவ வாய்ப்புள்ளது. தற்போது கப்பலில் ஏற்பட்டுள்ள பாதிப்பும் இவ்வகையாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. ஆனால், உலகின் வெவ்வேறு பகுதிகளில் இவ்வைரஸ் வெவ்வேறு விதமாகச் செயல்படுகிறது.

ஹன்டா வைரஸைக் குணப்படுத்தத் தடுப்பூசிகளோ அல்லது நேரடி மருந்துகளோ இல்லை.

காய்ச்சலைக் குறைத்தல், உடலில் நீர்ச்சத்தைப் பராமரித்தல் மற்றும் செயற்கை சுவாசக் கருவிகளின் மூலமே சிகிச்சை அளிக்கப்படுகிறது. எலிகளுடன் தொடர்பு கொள்வதைத் தவிர்ப்பதே மிகச் சிறந்த பாதுகாப்பாகும். சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருப்பதன் மூலம் ஆபத்தைக் குறைக்கலாம்.

கப்பலில் நிலைமை கவலைக்கிடமாக இருந்தாலும், நிலப்பகுதி யில் உள்ள பொதுமக்களுக்கு உடனடி ஆபத்து ஏதுமில்லை என்று சுகாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். 'எம்.வி. ஹோண்டியஸ்' கப்பலில் உள்ள நிலைமை மிகவும் கவலைக்குரியதாக இருப்பதாகப் பயணி ஜேக் ரோஸ்மேரின் தெரிவித்துள்ளார்.

# உக்ரைன் போர் நிறுத்த நாளில் ரஷியா தாக்குதல்!

கீவ், மே. 8–

உக்ரைன் தன்னிச்சையாக அறிவித்து கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் அமலுக்கு வந்த போர் நிறுத்தத்தை நிராகரித்து, அந்நாட்டு நகரங்களைக் குறிவைத்து ரஷியா 100க்கும் மேற்பட்ட ஏவுகணைகள், ட்ரோன்களை ஏவி புதன்கிழமை தாக்குதல் நடத்தியது.

இத்தாக்குதலில் 27 பேர் உயிரிழந்ததாகவும், 120க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் உக்ரைன் உள்துறை அமைச்சர் இஹோர் கிளிமென்கோ தெரிவித்துள்ளார்.

2ஆம் உலகப் போரில் ஜெர்மனியின் வீழ்ச்சியைக் கொண்டாடும் வகையில், ரஷியா 8, 9 ஆகிய தேதிகளில் போர்நிறுத்தத்தை அறிவித்தது. ஆனால், அதற்கு முன்னதாக உக் ரைன் அறிவித்த போர் நிறுத்தத்தை ரஷியா சீர்குலைத்திருப்பது அதன் உள்நோக்கத்தை வெளிப்படுத்துவதாக உக்ரைன் விமர்சித்துள்ளது. அமைதிக்கான உக்ரைனின் முன்னெடுப்புகளை ரஷியா மீண்டும் ஒருமுறை உதாசீனப்படுத்தியுள்ளதாக உக்ரைன் வெளியுறவு அமைச்சர் ஆண்ட்ரி சிபிஹா கடும் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

## 27 பேர் உயிரிழப்பு!

மேலும், அவர் கூறுகையில், 'புதின் மனித உயிர்களை விட ராணுவ அணிவகுப்புகளுக்கே முக்கியத் துவம் அளிக்கிறார். ரஷியாவின் இத்தகைய போக்கைக் கட்டுப்படுத்த சர்வதேச சமூகம் புதிய தடைகளை விதிக்க வேண்டும். உக்ரைனுக்குத் தேவையான ராணுவ உதவிகளை அதிகரிக்க வேண்டும்' எனக் கோரிக்கை விடுத்தார்.

**பரஸ்பரம் குற்றச்சாட்டு!**

உக்ரைன் தனது போர்நிறுத்த உறுதி மொழியைப் பின்பற்றவில்லை என்று ரஷிய பாதுகாப்பு அமைச்சகமும் குற்றஞ் சாட்டியுள்ளது.

ரஷிய வான்பரப்பில் உக்ரைனின் 53 ட்ரோன்களைத் தங்களின் வான்பாதுகாப்பு அமைப்பு சுட்டு வீழ்த்தியதாக ரஷியா தெரிவித்துள்ளது. கிரீமியாவின் ஜன்கோய் நகரில் உக்ரைன் நடத்தியட்ரோன் தாக்குதலில் 5 பேர் உயிரிழந்ததாக ரஷிய ஆதரவு ஆளுநர் செர்ஜி அக்சி யோனோவ் குறிப்பிட்டுள்ளார்.



சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் வாக்காளர்களுக்கு 142வது வட்டத்தில் கலைஞர் பொன் விழா வளைவு அருகே தொடங்கி 142 அ வட்டம், 140 அ வட்டம், 140 வட்டம், 139 வட்டம், 139 அ வட்டம் ஆகிய வட்டங்களில் அனைத்துத் தெருக்களிலும் மா.சுப்பிரமணியன் கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுடன் நன்றித் தெரிவித்தார். இந்நிகழ்வில் பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம்கவி, மாவட்ட தலைவர் எஸ்.குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன், களக்காடி எல்லப்பன், ம.தி.மு.க மாமன்ற உறுப்பினர் ப.சுப்பிரமணி, வட்டக் கழகச் செயலாளர் தா.மோகன்குமார் எம்.சி., உள்ளிட்ட ஏராமான தி.மு.கழகத்தினர், மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியினர் கலந்துகொண்டனர்.